## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.296/2016
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : Tmt.Amalorpava mary |
| Husband's Name | : மங்களதாஸ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2021.

**முதல் விசாரணை -**

நான் கீழக்கரணை ஹவுசிங்போர்டில் வசித்து வருகிறேன். கடந்த 25.05.2016 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் என் வீட்டுக்காரரை தலையில் சீனிவாசன் என்பவர் அடித்து விட்டார். நான் அந்த நேரத்தில் என் பேரனுடன் எஸ்ஆர்எம் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். என் பக்கத்து வீட்டுக்காரர் ராஜேஸ்வரி எனக்கு இது சம்பந்தமாக போன் செய்தார். நான் வீட்டிற்குச் சென்று என் கணவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அதன்பிறகு என்னுடைய கணவரை மேல்சிகிச்சைக்காக சென்னை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். மருத்துவமனையில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தலையில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. 1 1|2 மாத சிகிச்சைக்குப் பிறகு எனது கணவரை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டேன். தலையில் காயம்பட்ட காரணத்தினால் இன்னமும் அவருக்கு வலிப்பு வந்து கொண்டிருக்கிறது, அதற்காக அவர் மாத்திரை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். 5 வருடங்களாக அவர் உட்கார்ந்த நிலையிலேயே இருக்கிறார். அவரால் எழுந்து நிற்க இயலவில்லை. இது சம்பந்தமாக நான் மறைமலைநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நானே என் கைப்பட எழுதினேன். அந்த புகாரானது அசாஆ 1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றது. எதிரியை என்னால் அடையாளம் காட்ட இயலும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை -**

நான் எஸ்ஆர்எம் மருத்துவமனை சென்று என்னுடைய பேரனுக்கு சிகிச்சை பெற்று வந்த சமயம் எனது கணவரை எதிரி அடித்து விட்டார் என்ற விவரத்தை பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்ற விவரத்தை நான் புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். எதிரி சீனிவாசன் வீட்டில் நான் குடியிருந்தேன் என்பதற்காக வாடகை ஒப்பந்தம் எதையோ அல்லது வாடகை ரசீது எதையோ நான் போலிசாரிடம் விசாரணையின்போது கொடுக்கவில்லை. புகாரை எப்பொழுது நீங்கள் காவல் நிலையத்தில் கொடுத்தீர்கள் என்றால் சம்பவம் நடந்து 25 நாட்கள் கழித்துதான் நான் புகார் கொடுத்தேன். போலிசார் உங்களை எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் நான் புகார் கொடுத்த பிறகு விசாரித்தார்கள், வாக்குமூலமும் பதிவு செய்தார்கள். எப்பொழுது உங்கள் வீட்டுக்காரரை விசாரித்தார்கள் என்றால் 10 நாட்கள் கழித்து எனது வீட்டில் வைத்தே எனது வீட்டுக்காரரை போலிசார் விசாரணை செய்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பொழுது ஆவணங்களை நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை நான் என்னிடமே வைத்துள்ளேன். உங்கள் வீட்டுக்காரருக்கு குடிப்பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் சம்பவ தேதியில் அவர் குடிக்கவில்லை. அவர் வேலைக்குச் சென்றுவிட்டு 07.00 மணிக்கு வீட்டுக்கு வந்திருந்தார். உங்கள் புகாரில் உங்கள் கணவர் சம்பவத்தின்போது வீட்டில் குடித்துவிட்டு இருந்தார் என்று சொல்லி இருக்கிறீர்களே என்று கேட்டதற்கு சாட்சி அவர் குடித்திருக்கலாம் என்று சாட்சியம் அளிக்கிறார். அசாஆ 1 ஆக குறியீடு செய்ய்ப்பட்டுள்ள புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் வீட்டருகே ராஜேஸ்வரி வீடுகள் தவிர மற்ற வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. போலிசார் உங்களை விசாரிக்க 20 நாட்கள் கழித்து வந்தார்களா என்றால் 3 நாட்களில் வந்து விசாரணை செய்தார்கள். விசாரணையின்போது போலிசார் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட கட்டையை எடுத்துச் சென்றனர். போலிசார் வீட்டிலிருந்து கட்டையைப் கைப்பற்றியபோது உங்களிடம் எதுவும் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. என்னுடைய கணவரை போலிசார் புகார் கொடுத்த 2, 3 நாட்களில் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள், அவர் அப்பொழுது நல்ல நிலையில் தான் இருந்தார். ராஜேஸ்வரி உங்கள் குடும்பத்திற்கு நெருக்கமானவரா என்றால் எங்கள் வீட்டருகே இருக்கிறார் அந்த பழக்கம்தான். அசாஆ 1 ஆன புகாரை நீங்கள் எங்கு வைத்து எழுதினீர்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து நான்தான் எழுதினேன். போலிசார் அப்பொழுது உடனிருந்தார்களா என்றால் இருந்தார்கள் ஆனால் அவர்கள் சொல்லிக்கொடுத்து நான் எழுதவில்லை. சம்பவத்தின்போது உங்கள் கணவர் அணிந்திருந்த இரத்தக்கறை படிந்த சட்டை அல்லது துணிமணிகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. காயம்பட்டதை நீங்கள் புகைப்படம் எடுத்தீர்களா என்றால் இல்லை. என் கணவரை மருத்தவமனையில் சேர்க்கும் பொழுது நானும் எனது மைத்துனர் அந்தோணிதாசும் சென்றிருந்தோம். மருத்துவமனையில் மருத்துவர் உங்களுடைய விவரத்தை கேட்டுத்தெரிந்து கொண்டாரா என்றால் தெரிந்து கொண்டார். அந்தோணிதாஸ் எங்கே இருக்கிறார் என்றால் அவர் சென்னையில் வசித்து வருகிறார். சம்பவத்தின்போது அவர் ஒரு விஷேசத்திற்காக எனது வீட்டிற்கு வந்திருந்தார். அந்தோணிதாசை நீங்கள் புகார் கொடுக்கும்போதுதான் அழைத்துச் சென்றீர்களா என்றால் அவர் எனது கணவரை மருத்துவமனையில் சேர்த்த பிறகு அப்படியே சென்று விட்டார். சம்பவ சமயத்தில் நீங்கள் இல்லை என்றாலும் உங்கள் கணவர் குடிபோதையில் கீழே

விழுந்துவிட்டார் என்றாலும் அதனை மறைத்து தவறான புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னாலும் சரியல்ல. உங்கள் கணவர் குடிபோதையில் கீழே விழுந்துவிட்டதை மறைத்து பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. அவருக்கு தற்பொழுது ஏற்பட்டிருக்கும் வலிப்பு அவரின் குடிப்பழக்கத்தினால் வந்தது என்று சொன்னால் அது சரியல்ல. உங்களுடைய கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் எதிரியால் ஏற்பட்டதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.